



ஓலை 64 | ஓசை 184 | மார்ச் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# திருக்குறள்

**இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று**


இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

"மணிமேகலையின்
கனவில்
அமுத சுரபியின்
தேடல்
இந்த முறை
உணவிற்கு பதில்
நீர்"



"வறுமை
கண்ணாடியில்
வயிறுகள்
முகம் பார்க்கின்றன"

"சமூக அந்தஸ்துகளோ
ஜாதி மத பேதங்களோ
பசி எனும் தராசில்
சமமாய் அமர்கின்றன"

"நிலத்தடி நீருக்கு
பூஜை செய்யும்
ஆழ்துளை கிணறுகள்
நரபலி
கொடுக்கின்றன"


கவிஞர் அன்னலட்சுமி சரவணன் ஈரோடு

அடைகாத்த கோழி
அங்கேயும் இங்கேயும் அலைகிறது
வானத்தில் பருந்து.

விடியும் பொழுதில்
பருந்துக்கு காத்திருக்கு விருந்து
விடுபட்ட கோழிக்குஞ்சு.



கண்ட காட்சிகளெல்லாம்
கனவாய்ப் போனது இன்று
கல்லூரி வாழ்க்கை.

கொட்டித்தீர்த்தது மழை
இடியுடன் மின்னலும் சேர்ந்தே
அழித்தது குடிசையை.

ஆலய வாசலில்
ஆவலோடு காத்திருக்கும் சிறார்கள்
அருகில் உணவு.

கவிஞர் செங்குட்டுவன்
ஊத்தங்கரை

வெட்டி சாய்ப்பதா வீரம்
மரங்களை நட்டு நீரூற்றி வளர்த்து
தலைமுறை காத்தலே தீரம்

வீட்டுக்கு ஒரு மரம்
கட்டாய சட்டம் போட்டு வளர்ப்போம்
அதுவே தேவையான அறம்

மரங்களே நமது கருவறை
வெட்டி வெட்டி சாம்பல் ஆக்கிட்டு
நாட்டை ஆக்கப்போகிறோம் கல்லறை

மரம் நடு விழா
மாதம் ஒரு முறையாவது கூடி
அதனை ஆக்குவோம் திருவிழா

லிமரைக்கூக்கள்
# ராஜு ஆரோக்கியசாமி

இயற்கையே நமது சொத்து
அழிப்போரைக் கண்டால் சும்மா விடாது
கொடுப்போம் அகத்தில் குத்து

மனிதர்க்கு மட்டுமா பூமி
அ முதல் ஃவரை அதுதானே
எல்லோர்க்கும் ஒரே சாமி

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி
பிச்சாண்டார் கோவில்

# தாயின் பெருங்கோபம்

கருச்சுமந்த சூல்
கருகிப் போகுக!
அமுது ஊட்டிய கொங்கை
முறிந்து போகுக!
உச்சி நுகர்ந்த மெய்
உருக்குலைந்து போகுக!
பெண்ணை சீரழித்த
பதர்கள் பட்டுப்போகுக!
இயற்கையே கயவரை
இல்லாமல் செய்திடு!



கவிஞர் செ.தமிழ்நேயன்
தமிழ்நாடு

# தாயுமானவன் என் அப்பா



அதட்டும் அப்பா
வில்லனாத் தெரிவாரு
உதட்டால முத்தம்
கொடுத்து மகிழ்விப்பாரு
அன்பை வெளிக்காட்டாத
யதார்த்தமா இருப்பாரு

தன்னோட சோகதுக்கம்
கவலையை தோல்வியை
தனக்குள்ள புதைச்சு
நிற்கும் தியாகிதானே
அப்பா அப்பா
நம்மக் கண்ணுல
கண்ணீர் வராம
நமக்கு சுகத்தைக்
கொடுக்கும் தெய்வந்தானே

தாய் இல்லாத
வீட்டுலதான் அப்பா
அம்மாவா அவதாரம்
எடுத்து நிற்பாரு
அன்பையும் அறிவையும்
சேர்த்துக் கொடுப்பாரு
தாயுமானவனா மகவுகளை
அரவணைச்சு நிற்பாரு

சுயம்புவா தன்பிள்ளைக
சாதிக்கணுமின்னு வியர்வை
சிந்தி உழைப்பாரு
தன்னம்பிக்கை விதைச்சு
உழைப்பையும் சேர்த்து
கத்துக் கொடுப்பாரு

இருக்கும் போது தெரியாது
அவர் அருமை
இல்லாத போது உணர்வோம்
அவர் பெருமை
அப்பா காத்துல வருது
என் கவிதை
வானத்துல இருந்து படிச்சு
வாழ்த்துச் சொல்லுங்க
விழியோர அருவியுடன்
என்றும் உங்கள் மகன்.

கவிஞர் செ.இலட்சுமணக்குமார்
ஈரோடு

# ஓர் இனிய உதயம்

என்னிலிருந்து
ஒரு கைப்பிடியளவு
என்னை எடுத்து வைக்கிறேன்.

என்னெதிரிலிருக்கும்
நீங்கள் பதற்றப்படுகிறீர்கள்.

என்னை எடுத்ததில்
வலியோ ரணமோ ஏதுமில்லை
எனக்கு.



என்னைப்போல் நீங்களும்
ஒவ்வொருவராய் ஒரு கைப்பிடியளவு
எடுத்து வைக்கிறீர்கள்.

அப்போது
உங்களின் பதற்றம்
தொற்றிக் கொள்கிறது என்னில்.

ஒவ்வொருவரும்
ஒரு கைப்பிடியளவு எடுத்தது
மலைபோல் குவிந்திருக்கிறது.

அந்த மலைக்குவியலின்
இடுக்கிலிருந்து
ஓர் இனியஉதயம்
நமக்காகத் தொடங்குகிறது.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம்

# உன்னை நேற்றுதான் கண்டேன்

ஒரு இரவு தூக்கத்தை தொலைத்தேன்
விழி மூடா நேரம் எல்லாம்
விழிக்குள் நீதான் என்றாய்

என்றோ உன்னை கண்டிருந்தால்
கவி எல்லாம் உனக்காக படைத்திருப்பேன்

காலம் கடந்த பின் கண்டதால்
கண்ணுக்குள்ளே மறைத்து வைத்தேன்

உன்னில் ஒவ்வொன்றும் அழகு
அதில் உதடு மட்டும்
உயிர் கொண்ட அழகு


சித்திரமே நீ அழகு
செம்பருத்தி நீ சிவந்த அழகு

உன்னை கனவில் காண ஆசையில்லை
உனக்காய் கவிதை எழுதி
காலம் போக்க ஆசையில்லை

நேற்று வந்தாய் இன்று போய் விடுவாய்,
நீ மலர் என்று நினைத்து
மனதை சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா
மூதூர்(இலங்கை)

பொழுது முடிந்ததும்
வேலையாட்களோடு வீடு திரும்புகிறது
மேற்கில் சூரியன்.



கவிஞர் அ.செல்வராஜ்
உடுமலைப்பேட்டை

கற்பனையில் கருவாகி
எண்ணத்தில் நிறைந்து
உயிர் மூச்செனக் கலந்து
பிறந்த கவிதை!
தாய்மொழியில் கோர்த்துக்
கட்டிய முத்துமாலை!
நம் நெஞ்சமதில் உலவிடும் காதலாக!
தனிமையைக் கொல்லும் அமுதமாக!
வறண்ட மனதின் வலிகளாக!
மௌனத்தின் அழகைச்
சொல்லும் மொழியாக!
கற்பனையில் காணக் கிடைக்காத
காட்சியெல்லாம் நம் கண்முன்னே
காட்சிப்படுத்தும் கவிதைகள்!
கவிதைக்குப் பொய் அழகு
உணர்வுகளில் கலந்திட்ட கவிதைகள்
விவரிக்கும் வார்த்தைகளில்
உயிர் கொண்டு போகுதே
கவிதைகள்!

கவிஞர் லதா சுப்ரமணியன் சென்னை-119

# தனிமை ஒரு வரமது

இரைச்சல் இல்லாத உலகம்
கடல் அலை ஓசைகள்!
கையில் பிடித்த புத்தகம்.
காதில் மிதமான பாடல்!
ஒடிக்கொண்டே இருக்கலாம்
இவையெல்லாம் தான்
நான் எனக்கே
எனக்காக
கொடுத்து கொண்ட பரிசு!
தனிமை சில நேரம்
வரமானது!




கவிஞர் ஸ்ரீவள்ளி
கோவை

# கருப்பு வெள்ளை நிறம்

பிறந்த குழந்தையை
ஆவலுடன் எட்டிப் பார்ப்பவர்
உதிர்க்கும் சொற்களில்
எஞ்சி நிற்கிறது
கருப்பு வெள்ளை நிறம்.

இருந்த வரை
நிமிடத்துக்கு நிமிடம்
எண்ணத்தாலும், செயலாலும்
நிறம் மாறிய அனைவரிடமும்
இறுதியாக எஞ்சி நிற்கிறது
கருப்பு வெள்ளை நிறம்.



பெயரும், நிறமும் மறைந்தபின்
இறுதி யாத்திரையில்
இறைந்து கிடக்கும்
வண்ணப் பூக்களிடம்
எஞ்சி நிற்கிறது
கருப்பு வெள்ளை நிறம்.

சாயங்கள் கரைந்து
நிறங்கள் தொலைந்து
வண்ணங்கள் வெளுத்து
நீர்த்துப் போன பின்
உலகின் பொருட்களில்
எஞ்சி நிற்கிறது
கருப்பு வெள்ளை நிறம்.

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# எழுதுக

மனதில் தோன்றியதை எழுத்தால் எழுதுக
வண்ணமாக்கி கற்பனை உருவில் எழுதுக
எழுத எழுத வரிகள் பிறக்குமே
புதிய சிந்தனைகள் பிறக்க கூடுமே
ஓலைச் சுவடியில் எழுதிய காலமாறி
கணிப்பொறியில் பதிவேற்றும் காலம் ஆனது
மையினால் எழுதியது மாறி தொடுதிரையில்
கைகள் நடனமாடி செல்லுகின்ற உலகமிது
பறவை இறகுகளால் வர்ண ஜாலமிட்டோமே
காலங்கள் மாற அறிவியலும் வளர்கிறது
சிற்பங்களில் கல்லெழுத்தைப் பார்த்தோம் இன்று
சிற்பமே காணாமல் உடைந்துப் போனதே
கற்பனை உருவில் எண்ணத்தை வெளிப்படுத்த
கண்ணுக்கு காட்சியாய் கொடுத்து பார்ப்போரை
எல்லாம் வியக்கும் வண்ணம் ஆனதே
எழுதுக வாழ்நாளில் ஒரு முறையாவது.



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்
நாகர்கோவில்

# வல்லமையின் மறுஉருவம் பெண்ணே!

வல்லமையின் வடிவமே!
வஞ்சமில்லா வானளவே!?
வலிமை உடலளவிலா
வளமையான நெஞ்சத்திலா?

வானவில்லின் அழகும்
வாசமுள்ள மலரின்
வாடாத மணமும்
வாசத்தின் தேசமே.



வங்காள விரிகுடாவின்
வரைவின் விரிவே.
வசந்தங்களின் தென்றலாய்
வளைவுகளின் தெளிவே.

முகத்தின் சுளியிலும்
முற்றத்தின் கோலத்திலும்
முறத்தின் வீசலிலும்
முனைப்பாய் தெரியவைத்திட.

விழிகளின் சிவப்பிலும்
வில்லான புருவத்திலும்
விழாக்கோல பருவத்திலும்
விரிசலாக காட்டிடுவாயோ?

கவிஞர் இராஜகை நிலவன்
மும்பை

# பிள்ளைக்கனிகளே

ஏழு ஏழு ஜென்மமெடுத்தாலும்
எனக்கிந்த வாழ்க்கையிலே

எழிலாக கிடைத்த செல்வங்களே
என் வீட்டு பிள்ளைக்கனிகளே

என்னோடு சண்டையிட்டு
எனக்காக அழுதிடுவரே

எகத்தாளமாக அடித்துக்கொண்டு
என்னவென்று நின்று பேசுவரே

எடு கோளை என்றால்
எதிரில் நிற்காமல் ஓடிடுவர்

எதையும் புரிந்துகொள்ளாமலே
எதிர்கேள்வி அடுக்கிடுவர்



எனக்கென பங்குவைத்து
எட்டியெடுத்து நகைத்திடுவர்

எவரிடமும் விட்டுக்கொடுக்காத
எதிலுமே விலகிடாத

என்னில் உதித்த முத்துக்களே
எதார்த்தத்தாமாக பேசிட்டு

எனை கேளி செய்தே
எனக்கு குருவாக ஆகிடுவரே

எந்தன் தாய்மையன்பிற்கும்
எத்தனை போட்டி வந்தாலும்

என்னருமை வாரிசுகளுக்காக
ஏழுமலை ஏழுகடல் எட்டிச் சென்று

எது நியாயமாக கேட்பினும்
எப்படியேனும் பெற்றுதருவேன்

எவர் எதிர்த்து நின்றாலும்
எட்டித்தள்ளி வாக்கை காப்பாற்றுவேன்!

கவிஞர் நீலாசுபாஷ் ஆக்கூர்

# கனவல்ல நிஜம்

கருந்துளையின் உள்ளிருந்து
கனவுநிலை காண்கிறேன்.

வருங்கால வாழ்வையெண்ணி
விளையாட்டாய் நோக்கினேன்.

திட்டம்போட்ட வட்டத்தினுள்
வாழ்க்கையொன்று வாழ்கிறேன்.

தெற்குமேற்கு திசைமாறி
இறகாக இழையோடினேன்.

பட்டம்வாங்கி பணமும்வாங்க
வேளைகளை தேடினேன்.

வயதுமாகி காதலாக
கல்யாணமும் ஆனதே.

மனைவிவந்து கலவிகொண்டு
மழலைவந்து சேர்ந்ததே.

இளமைசென்று முதுமைவந்து
பேரப்பிள்ளை மடியிலாடுதே.

மாண்டுவிடும் நாளையென்னி
நாளிகையும் நகருதே.

கருந்துளையில் கண்டகனா
நிஜமாகி முடிந்ததே பூமியில்.



கவிஞர் கோ.தினுசன் மட்டக்களப்பு(இலங்கை)

# வயக்காடு போற மாமா; வெரசா நீயும் வா மாமா

சேவலும் கூவிடிச்சே
பொழுதும் விடிஞ்சிருச்சே
மழையும் பெய்திருக்கு
கம்மாயும் நெறைஞ்சிருக்கே
கலயத்துல கஞ்சியத்தான்
கொண்டு வாரேன்

சுள்ளுன்னு கடிச்சிக்க
மோர்வத்தலும் கூடவேயிருக்கு
வயக்காட்டுக்கு போறமாமா
வெரசா நீயும் வா மாமா
கழனியத்தான் பக்குவப்படுத்தி
விவசாயம் செஞ்சிடலாம்



காளையத்தான் ஓட்டிகிட்டு
கலப்பையைத்தான் பூட்டிகிட்டு
கழனியைத்தான் உழுதிடலாம்
கருத்தாகவே ஒழைச்சிடலாம்
ஒத்தாசையா நானிக்கேன்
பத்திரமா பாத்திருக்கேன்

பாத்திகட்டி வரப்பெல்லாம்
ஏத்திகட்டணும் மாமா
வெதையெல்லாம் வெதச்சிருவோம்
தண்ணியத்தான் பாய்ச்சிடுவோம்
களையெல்லாம் அகற்றிடுவோம்
கண்ணும் கருத்துமாக

விவசாயம் பாத்திருப்போம்
சந்தோசமாத்தான் இருப்போமே
விதையும் முளைவிட்டுச்சே
வளர்ந்திங்கு பயிராச்சே
கதிரும் முத்திடுச்சே
மனசும் நெறைஞ்சிருக்கே

பாடுபட்ட நாமளுந்தான்
அறுவடையும் செஞ்சிருவோம்
மகசூலும் நல்லாயிருக்கு
நல்லவிலையும் கெடைச்சிருக்கு
கடவுளுக்கு நன்றி சொல்லுவோம்
நாமதானே

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்
விருதுநகர்

# பெண் போகப் பொருளல்ல

அலைபேசியில் குவிந்தது
அடுக்கடுக்காகக் குறுஞ்செய்திகள்
வங்கிகளும் வர்த்தகங்களும்
வாழ்த்தி ஓய்ந்தன

வகை வகையாய் ரகரகமாய்
விலைத் தள்ளுபடிகள்
ஆடை ஆபரணங்களுக்கும்
அழகுசாதனங்களுக்கும்
அவ்வளவே தானா?
அன்றுமட்டுமே அவள்
ஆராதிக்கப்படுபவளா?

அப்படித்தான் போலவென
ஆர்த்தி போன்றோர்
அவலநிலையால் என்றும்
அறைந்து சொல்கின்றனரே
அந்த காலத்தில் கூட இந்த
அக்கிரமம் நடந்ததுண்டோ?
ஆற்றுக்கு குளிக்கவும்
அவசரத்திற்கு ஒதுங்கவும்
அந்தி சாய்ந்திட்ட வேளையிலும்
அணங்குகள் சென்ற போதும்

அந்தப் பக்கம் சென்றிடவும்
ஆண்கள் தயங்கினரே
ஆண்குழந்தைகளின்
அன்னையரேக் கேளீர்



பெண் எனப்படுபவள்
போகப் பொருளல்ல
போற்றிடவிட்டாலும்
பொசுக்கிடாதிருக்கப்
புத்தியில் உறைத்திடுவீர்

அஞ்சிலேப் பதியவைத்திட
அடுத்த தலைமுறையினும்
அவதியுறாதிருக்கட்டுமே

பெண்பிஞ்சை சீர்குலைத்துவிட்டு
பெண்கள்தின வாழ்த்தாம்.

கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்
நாகர்கோவில்

# உறவுகள்

இறைவன் ஒன்றே உணர்ந்திடுவோம்
எல்லா மதங்களும் உயர்ந்ததென்போம்
முறையாய் உறவுகள் பேணிடுவோம்
முன்னேற்றப் பாதையில் சென்றிடுவோம்
***

பகைத்து வாழ்வதால் பயனுண்டோ?
பகைவராய் தனிப்பதால் பலனுமுண்டோ?
நகைத்து மகிழ்ந்தே வாழ்ந்திடுவோம்
நால்வரும் உறவால் உயர்ந்திடுவோம்
***

அடம்பன் கொடியும் திரண்டிடுமே
அதனால் பலமது பெற்றிடுமே
இடம்பெறும் சண்டைகள் தேவையில்லே
எரிச்சல் புகைச்சலால் மீட்சியில்லே
***

தனிமரம் தோப்பாய் தோன்றிடுமோ?
தனித்து நாம் வாழ்வதால் தேறுவோமோ?
கனிமரம் பறவைகள் நாடிடுமே
கலவரம் பொறாமைகள் அங்கில்லையே
***



கூட்டுக் குடும்பங்கள் குறையுதம்மா
குவலயம் கண்ணீரில் மூழ்குதம்மா
பாட்டியைப் பாட்டனை இணைத்திடுவோம்
பக்குவமாய் உறவுகள் வளர்த்திடுவோம்
***

இனமத பேதங்கள் ஒழித்திடுவோம்
இணங்கியே எதிலுமே நின்றிடுவோம்
மனதிலே உறுதி பூண்டிடுவோம்
மாற்றத்தை உறவால் கண்டிடுவோம்

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன்
இலங்கை

# இதயச்சாவி

பிரியாதிருக்க ஓர் பிரியாவிடையா?
பிரியத்துக்குரியவரைப் பிரிவது
பிரியாவிடையா?
பிரிகின்ற வேளையதற்கு
பிரியாவிடை என்று பெயர்
பொறித்தது யாரோ?

வரவேற்புக்கு இருக்கும்
மிடுக்கும் துடிப்பும்
வழியனுப்புதலில் இருப்பதில்லை.
இலையுதிர் காலத்தில்
இறுகிக்கிடக்கின்றன இதயங்கள்

நினைவுகளின் இடுக்குகள்
நிரம்பி வழிகின்றன
இதயச்சாவி கையிலிருந்தும்
தொலைந்து காணாமல் போனதாய் துயர்

வந்து சேர்வதும் விலகிச்செல்வதும்
பறந்து விடுவதும்
ஓய்வு கொள்வதும் சகஜமாக
வாழ்க்கைச்சாலையின் பயணிகள் நாம்.

உன் கிளைகள் மீதமர்ந்த
குருவியானேன் சிலநாள்
இப்போது பெருவிருட்சத்தின் சாட்சியங்கள்
வரம் கேட்டு வருகையில்
விடை கொடுக்க வேண்டுமே.



சென்று வா வென்று திரும்பு
என்னுள்ளமெனும் அமுதச்சோலைக்கு
உனக்கு இன்னொரு
தாய்வீடாக எண்ணிக்கொள்

பிரிவின் துயரில்
கண்ணீரத் துளிகள் பெருகினாலும்,
ஞாபகங்களில் பொதிந்த
மகிழ்வின் இறுக்கங்கள்
அதை உலர வைக்கும்

அதுவரை எப்படியாவது
உயிர் பிழைத்துக் கிடப்பேன்.

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில் ஏறாவூர்(இலங்கை)

சாதனையாளர்களின் வரலாற்றை
படித்தால்மட்டும் போதாது.
சாதனையாளர்களின் வரலாற்றில்
உன்னை படிக்கும் அளவிற்கு,
சாதனைகள் படைக்க
முயற்சி,பயிற்சி, விடாமுயற்சி
தேவை.



கவிஞர் பெ.சுரேகா திண்டுக்கல்

# மணிமேகலை (நான்கு)

3. மலர்வனம் புக்க காதை

1. மணிமேகலையின் வருத்தம் :

மணிமேகலை பூத்தொடுக்க மாதவியின் துயர் கேட்டாள்
பணிவான தாய் தந்தையின் கொடிய துன்பம் அறிந்தாள்
கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து கன்னத்தில் வழிந்தது
வண்ண மலர் மாலைமேல் கண்ணீர் வீழ்ந்து நனைத்தது

2. மாதவியின் உத்தரவு

மகளின் கண்ணீரில் மாலைகள் நனைந்து புனிதம் கெட்டது
சுகமான மாலைகள் கண்ணீர் ஈரம் தூய்மையை இழந்தது
மகளிடம் மாதவி புதிய மலர்களை கொய்துவரச் சொன்னாள்
மேகலை தனியே செல்வது நன்றன்று, சுதமதி உடன் சென்றாள்




3. சுதமதி

சண்பை நகர்,வேளாளர் கௌசிகன் ஒரே மகளாகப் பிறந்தவள்
விண்ணில் சென்ற விஞ்சையன் அவள் மலர் கொய்யக் கண்டான்
கண்டதும் காதல் நந்தவனம் வந்தான் அவளை ஆரத்தழுவினான்
எண்ணியபடி சரசம் முடித்து அவளை விட்டு பறந்துவிட்டான்
(விஞ்சையன் ; விண்ணிலே உலவும் வித்தியாதரன்.)
புத்ததேவனின் அன்பினால் எல்லோரும் செல்லும் வனம் உவவனம்
அத்தகைய நந்தவனத்தில் மலர் எடுக்க மாதவி மகளுக்கு கூறினாள்
எத்தகைய வனமானாலும் மேகலை தனியே செல்லல் ஆகாது என
ஒத்தாசையாக சுதமதி மேகலையோடு தானும் உடன் சென்றாள்
சத்தியமாக தனக்கு நேர்ந்தது மேகலைக்கு நேரலாமோ அஞ்சினாள்

வீதிக் காட்சிகள் ( ஒன்று : உண்ணா நோன்பி )
அருகன் கோயிலில் உள்ளவன் அம்மணமாக நடந்து வந்தான்
விருப்பு வெறுப்பு இல்லாத அவனுக்கு எல்லாமே ஒன்றுதான்
அரும்பாவிபோல் தோன்றும் அவன் யாருக்கும் தீங்கு செய்யான்
விரும்பி எதையும் வேண்டாத அவன் ஒரு உண்ணா நோன்பி
( அரும்பாவி : மிகக் கொடியவன் )

இரண்டு : கட்குடியன் ,
ஆடிவரும் கள் குடியன் எதிரில் சமண முனிவரைக் கண்டான்
தேடினாலும் கிடைக்காத மோன நிலை தரும் தென்னங்கள் இது
வீடுபேறு கிடைக்க மந்திரங்கள் தேவை இல்லை இது போதும்
குடிக்க குடிக்க கவலை போகிறது தங்களின் ஞானம் கிடைக்கிறது.
நாடிவரும் வேதம் அல்லவா தங்களுக்கும் உகந்ததே" என்றான்

மூன்று; பித்தன் ஒருவன்
பித்தன் ஒருவன் வீதியில் அரற்றினான், கூவினான், சுழன்றான்
எத்தனைப் போல் தன் நிழலை விடாமல் துரத்திச் சென்றான்
சத்தமாக சிரித்தான், துணிகளை கிழித்தான் தரையில் புரண்டான்
அத்தனைபேரும் அவனிடம் ஒதுங்கி நிற்க நிழலோடு ஓடினான்

நான்கு :வேற்று நாட்டினர்
சுவர் ஓவியங்களின் உண்மைத் தன்மையின் தத்ரூபம் வியந்தனர்
அவர்களின் பரவசமும் பாராட்டும் மக்களை உற்சாகமூட்டியது
தேவரும் கண்டாளே காதல் வசப்படும் மணிமேகலையைக் கண்டனர்
பவளக் கண்கள் நிலம் நோக்க சுதமதியுடன் மலர்வனம் புகுந்தாள்.

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# பசிப்பிணி அகற்றும் மருத்துவச்சி

விடியலில் எழுந்தே
விரைந்தே ஏகி

அடுப்படி துடைத்து
அழுக்கு அகற்றி

பசுஞ்சாணியால் மெழுகி
பாந்தமாய்க் கோலமிட்டே

சுள்ளிகளை வைத்து
சுத்தமான பானையேற்றி

பசித்தோர்க்கு உணவிடப்
பாங்காய்ச் சமைப்பாள்.

புகைந்தால் சமையலில்
புகைவாசம் வருமென்று

ஊதாங்குழலை எடுத்து
ஊதுவாள் காற்றுக்காய்.

அடி வயிற்றுக் காற்றூத
அடித்தொண்டை கமறும்.

நுரையீரலில் புகையோடி
நொடியில் இருமலாக

வாட்டத்தைக் களைந்தே
வாசமாய்ச் சமைப்பாள்.



காய்கறி நறுக்கி
காரசாரப்பொரியல்

மணக்கும் குழம்பு
மலரும் சோறாக்கி

எடுத்தே வைத்து
அடுக்களை அனலில்

வந்த வியர்வைத்துளியை
விட்டால் துடைத்தே

சமைத்த பாத்திரத்தைச்
சடுதியில் இறக்கி

மூடி வைத்தே
மும்முரமாய்ப் பரிமாறி

பாசமாய் மகிழ்ந்தே
புன்னகை பூப்பாள்.

கவிஞர் செ.கலைவாணி
மேட்டூர் அணை

# பூந்தோட்டத்தில்

பூத்துக் குலுங்கும்
பூந்தோட்டத்தில்
மஞ்சள் இலை மீது
வண்ணத்துப்பூச்சி

காற்றில் அவிழ்ந்த
பூவிதழ்
வண்டுகள் நிற்கிறது
காம்பினில்.



வேர்வை பொங்கி
மொட்டுகளில்
காலை சூரியன்
கண்சிமிட்ட.

வாலை ஆட்டி
நாய் வருகிறது
பாவம் மூச்சு வாங்கும்
உரிமையாளர்.

சாய்வு நாற்காலியில்
பனி தூங்க
உசுப்பி விடும்
முதியவர்.

வேறு வேலை ஏதுமில்லை
சூரியக் கதிரில்
சுட்டு விட காத்திருக்கும்
நிழல் படக்காரர்.

கவிஞர் மூ.மணிதிருமுருகன்

# சுயம்வரம்

சுயத்தை தொலைத்திட வரனென்று வரும்
தட்டிக்கழித்து நெட்டி தள்ளி வருடமும் நகர்ந்தது
வயதேற வயதேற கேள்விகள் முளைத்தது
சொல்லொன்றும் வில்லாம்பாய் நெஞ்சை தாக்கி நின்றது
மாற்றம் நோக்கி மனிதனை நாடவோ
நாணம் தொறந்து நவநாகரிகமாகிடவோ
சபூர் பொறுமைக் காத்தலோடு
காயமாறா கண்ணீரோடு கையேந்திடுவேன்
வருடங்கள் நான்கும் ஆகிட
விடியலைத் தான் கேட்டு நின்றேன்
2024.03.08 சர்வதேச மகளிர் தினமல்லவா

அடைமழையைப்போல நாடெங்கும் இல்ல
விளையாட்டு நடந்தேறிய வண்ணம்
அந்நாளில் என் ஊரிலும் கலை கட்ட
பயணித்தோம் புது வரவாய்
கலைத்து போய் வீடு வர
அவசரமாய் ஓர்குளியல்
தாயவளை நினைவாக்க உறவாய் நீளும்
மாமனும் குடும்பத்தோடு வந்து நின்ன போது



சிறு கலாய்பாய் நானும் உதித்தேன்
மாமா பொண்ணு பாக்க போவதாக
மச்சுனனும் கல்லத்தனமாய் தயார்
இரு மாப்பிள்ளை வீட்டார் வர போவதாக என்றதுமே
சிறு நடுக்கம் வந்தது உண்மை

சட்டென்று மாறிய பேச்சில்
உண்மை புரிய அவசமாய் ஓர் வீட்டு சுத்தம்
வந்தது பெண்ணொருத்தி கணவரோடு
அப்பெண்ணவளை சில பொது அவையில்
காணுகிற பொழுதுகள் வந்தது எனக்கு
புன்னகைத்து செல்ல அவளோ கண்டுக்கொண்டு சிரித்தவளோ
அப்போதே மடித்துச் சுருட்டி கொண்டு போயிருப்பாள் போல
தாயாக நிற்கும் அவளோ மச்சுனனுக்கு பொன்னு பார்க்க வந்திருக்க
அவளுக்கு பிடித்தம் முகமெல்லாம் பூரித்து நின்றாள்

நினைத்தால் சிரிப்பு மலர்கிறது அப்பெண்ணவளை நினைத்தே
நடப்பெது எதுவோ நடக்கும் நாம் நினைத்ததும் காத்திருப்பிலே
அவசரம் ஆபத்தை தரும்
அமைதியாய் கடந்திடு நினைப்பதை வல்லோனிடம் ஒப்படைத்து

கவிஞர் சஹ்னாஸ் பேகம் புத்தளம்(இலங்கை)

# மார்ச் எட்டன்று

வெற்றிக்கனியை எட்டிப்பிடித்த,
பக்குவமான பஞ்சுமிட்டாய்
அழகிகளின் இரண்டு மாத உழைப்பு.



ஆதரவாளர்களும், விருந்தினரகளையும்,
நீதிபதிகளாய் நிகழ்ச்சிக்கு வந்தவர்களையும்,
செலவாக்கு செலுத்தியவர்களையும்,
திறம்பட திறன்பட மிளிரவைத்த யுக்தி
ஸ்ரீதேவிக்கே பொருந்தும்.

முக்கிய குழு முத்தாய்ப்பபாய்
செயல்பட்டதில் தப்பியது தலை (ஸ்ரீ)

ஒற்றை நிமிடத்தில் மக்கள்
அதிரவைத்துவிடுவார்கள் என்ற
ஒற்றை உபதேசத்தில் கலமிறங்கியது குழு.

குறைகளை விட வாழ்த்துக்கள் அதிகம் பெற்ற தினம்.
வெற்றுவயிறுடன் வந்தாலும் வெறுங்கையுடன் வராத
எங்கள் அன்னபூரணி நதியா.

இனிப்பை இன்முகத்துடன்
இயல்பு மாறாமல் கொண்டுவந்து
சேர்க்கும் சரவணப்பிரியா.

மகள் நாட்டிய தேவதை
ஆனாலும் இவர் கண்களிலும்
நடனம் காணலாம். திகட்டாத திவ்யா.

பொறுமையின் பொக்கிஷம் அச்சென்று தும்மினாலும்
அசராமல் அதையும் குறித்துவைக்கும் யாழினி.

கூட்டத்தின் குஷ்பூ மனக்குரல்களை
வெளிக்குரலாக தந்து அசத்தும் தேவதை
ஸ்ரீப்ரியா.

ஓரமாக நின்று ஒன்று விடாமல்
படிப்பினை பெறும் சந்திரலேகா.

வாதமோ, விவாதமோ,
வாட்ஸ்அப்போ, அரங்கமோ
கிடைக்கும் இடங்களிலெல்லாம்
முக்கிய தலைப்புகளை தரும் ரம்ஜான்.

நடனமென்றால் இலகுவாக வரும் இவருக்கு,
மனிதமனமென்றால் அத்துனை இரக்கம்
ப்ரீத்தியின் பிரியமான உள்ளம்.

துனபம் ஆயிரம் இருப்பினும்
இன்பமாய் உள்ளத்தை அள்ளிக் கொள்ளும் கோகி.
உயரத்தில் மட்டுமல்ல உள்ளத்திலும் எண்ணத்திலும்
உதவியிலும் ஏற்றமான எங்கள் புவனா.

அரங்கிலும் அறையிலும் நடனம் எப்போது என்று
ஏங்கும்,இந்த கிளி நம்பெயருடன் "மா" சேர்த்து அழைக்கும்
கொஞ்சும் கிளி பிந்துமா.

முரட்டு ஒற்றையர் இல்லை இல்லை இரட்டையர்.
இந்தியாவிலிருந்து இங்கு இறங்கியிருக்கும்
குட்டி தேவதை சிவா& பப்பி.

அலப்பறையில்லாத அமைதி முகம் மட்டுமல்ல
குணமும் தான் எங்கள் பவானிக்கு.

அனைவரின் மனதையும் அறிந்து,
அத்துனை மனதையும்
கொள்ளையடிக்கத்துடிக்கும் கிருத்திகா.

விபரம் அறிந்திருந்தாலும் விண்ணப்பத்திற்கு மட்டுமே
குரல் தரும் எதார்த்த தேவதை கலை.

காரணமோ, காரியமோ, உள்ளடக்கத்துடன்
சு(வா)சிக்கும் ஐ.டி தேவதை சரண்யா.

சிரிப்பை சிதறடித்தோம்.
சிட்டுக்குருவியாய் சிறகடித்தோம்.
சிந்தையில் நீங்கா இடம் பிடித்த தோழிகளுக்கு,

சிறப்பான என் கிறுக்கல்கள் சமர்ப்பணம்.

**கவிஞர் பானு அப்துல்லா**

# என்னவளே உன்னால் நான்

இருவிழி பார்வையால் இதயக் காதலையும்
கருவிழி நுனியில் கண்ணிய நடத்தையும்
நெருப்போடு என்னை நெகிழ வைத்தவளே
இருக்கும் வரை இனியவளே, இதயமும் நீயே

எழுதுகோல் எடுத்தேன் எழில்மிகு கவிதையானாய்
பழுதாகும் நேரத்தில் பாவையே நீ, தோழியானாய்
எழுந்து நடக்கிறேன் என்னவளே உன்னால்
செழுமையும் புதுமையும் செகத்தில் நீ தானே



உன்னில் வாழ்கிறேன் உன்னருகில் நானும்
என்னிதயம் காண என்னுடன் வாழ்வாயா?
இன்பமும் துன்பமும் இமைக்கும் நேரமும்
தென்தமிழின் தேன்சுவையை தேவாமிர்தம் ஆக்கியவளே!

அதிசயமான பெண்தான் அன்னை வடிவில்
இதிகாசமும் கண்டேன் இனியவளே உனக்குள்
விழிவாசம் எதற்குஉன் விழியழகு போதுமே
நதியாக வாழவேண்டும் நங்கையே உன்மடியில்

கவிஞர் ஈ.தவணிதன்
பல்லடம்

# பள்ளிக்கூடம்

இந்த சுற்றுச் சுவரின் உள்ளே
வலது கால் வைக்கும் முன்னே
இன்னல்கள் தரும் இனங்கள்
மனிதம் கொன்று தின்னும் மதம்
சாக்கடையாய் நாறி போன சாதி
இவைகளை கலைந்து காலடி வை

அறிவை கொடுத்துச் செறிவுபடுத்தும்
அன்பை மனதில் புரிய வைக்கும்
உயர்வுகள் தனை உணர வைக்கும்
உண்மை தனை உரைக்க வைக்கும்
உறுதியை உன்னில் இறுக வைக்கும்
உழைப்பை உனக்கு கற்று கொடுக்கும்



தாய்மொழி சிறப்பு தெரிய வைக்கும்
அண்டை மொழியும் அறிய வைக்கும்
வாழ்க்கையை பகுக்க கணிதம் தரும்
அறிவியல் தந்து வியக்க வைக்கும்
சமூகம் விளங்கிட புரிய வைக்கும்
விளையாட்டில் வெற்றி சூட வைக்கும்

விவசாயம் உயிரெனப் புரியச் செய்யும்
விண்ணை அளந்து விளக்கச் செய்யும்
அணுவை பிளந்து ஆராயச் செய்யும்
அத்துனையும் தந்து ஆச்சரியம் தரும்
காணும் உன் கனவுலகை நீ வந்து சேர
கடவு சீட்டை உன் கையில் கொடுக்கும்

"இந்த பள்ளிக்கூடம் எனும் பரம்பொருள்!"

கவிஞர் ஆனந்த் குவை.ஜெயராமன் சேத்தியாத்தோப்பு

# இதயம் இல்லாதவன் சற்று சிந்தித்துப் பார்

பாதை இரு புறம் மரங்களை தினம் வெட்டுகிறாய்
மாடியில் தோட்டம் போடுகிறாய்
போதையில் தினமும் வாழ்கிறாய் சிறு
தேவதைகளை பாலியல் வதை செய்கிறாய்

இயற்கைக்கு மட்டுமா இடையூறுகளை நீ செய்கிறாய்
இதயமே இல்லாத சிறுபெண்குழந்தைகளை வதைக்கிறாய்
வேதனையாக இருக்கிறது தினம் இதுவே
வேதாளம் மரம் ஏறியது போலவே நடக்கிறது

இதயம் இல்லாதவனே சற்று சிந்தித்துப் பார்
இந்த நிகழ்வு உன் வீட்டில் நடந்தால் உனக்கும் அது மகிழ்ச்சியா
இதயம் உனக்க உடன் குளிர்ந்திடுமா இதுபோல் தானே
எந்த செயலையும் செய்யும் முன்னே சிறிது யோசித்துப் பார்

தவறுகள் என்பது எல்லாமே தெரிந்து செய்வதுதான்
தவறுக்கு நீ கூட்டாக செய்யும் கூட்டணியுமே இதில் தவறுதானே
திருந்தி வாழ்ந்திடு திருத்திக் கொண்டு வாழ்ந்திடு நீ மனிதன்
ஒருபோதும் இதில் நீ குழந்தைகளையும் போதைப் பொருளாக நினைக்காதே




கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்

# இதயம் இல்லாதவன் சற்று சிந்தித்து பார்

நெஞ்சுருக வைக்கும்
நேசமிகு ஓவியம்தான்
உள்ளார்ந்திட வைக்கும்
உயர்ந்த திருக்குறளாகும்
வஞ்சகம் மறந்து
வாழவே சொல்லும்
நஞ்சில்லாத கருத்துக்களே
நம்முடைய சொத்தாகும்

அறநெறி தவறாமல்
அரணோடு இருக்கவே
மறத்தோடு கூறுகின்ற
மந்திரமே சிலம்பாகும்
புறமின்றி போனாலும்
புண்ணியமே பலனென்ற
திறத்தோடு வாழுகின்ற
திருவடியே மணிமேகலையாகும்




வையகமும் செழிக்க
வைகறையில் பாடுகின்ற
வைதேகி கோதையின்
வைரமுடைய திருமொழியும்
தவமுடைய இலக்கியத்தை
தித்திக்கும் கீதங்களை
ஆவலோடு கற்றால்
ஆகலாமே சான்றோராக

கவிஞர் ப.வெங்கட்ரமணன்
குளித்தலை

# அகிலத்தை வெல்லும் அன்பு

வாழும் வாழ்க்கை என்பது அன்பை போற்றி வளர்ப்பது!
அன்பு மட்டும் நிலைத்து விட்டால் அகிலமும் வசமாகும்!
ஆசை களவு வன்மம் நீக்கி வாழும் மனிதன் தெய்வமே!
உயிர்களிடத்தில் அன்பு உயர்ந்த வாழ்வின் மாண்பு!
ஆசைகள் அற்ற மனிதன் என்றும் பாதை மாறி போவதில்லை!
இன்று இருக்கும் மனிதன் நாளை இருப்பதில்லையே
புகழோடு வாழும் மனிதனுக்கு அழிவு என்பது இல்லையே!
மண்ணில் வாழும் காலம் மட்டும் மனிதன் போற்றி வாழ்வதே!
போர்களற்ற உலகம் காண அன்பு வழியை நாடிய அசோகரும்!
பசிகள் அற்ற உலகம் காண வள்ளலாரின் வழியுமே!
ஆசையே துன்பத்திற்கு காரணம் என மணிமுடிதுறந்த புத்தரும்!
போதித்த நல்பாடங்களே நம் புனிதமான பாரதமாம்!
அன்பு என்ற ஒன்றே அகிலத்தையும் வெல்லுமே!



கவிஞர் ஜேபி.பன்னீர்செல்வம்
சேத்தியாத்தோப்பு

# தேர்தல் திருவிழா

புதிய வர்ணம் பூசப்பட்ட
சின்னங்களும் கொடிகளும்
காட்சிப் பிழை.

வழிநெடுக தலைவர்களும் வேட்பாளர்களும்
கலையாமல் காத்திருக்கின்றனர்
சுவர் விளம்பரம்.

வசப்படாத மக்களை வசியப்படுத்திட
கட்சிகளின் கையூட்டு
இலவச அறிவிப்புகள்.

கொள்கைகளை தொலைத்து விட்டு
புதிய சம்பந்தம்
தேர்தல் கூட்டணி.

தெரியாத மொழிகளில் ஆர்வம்
மக்களை மயக்கிட
பிரச்சார களம்.

விதவிதமான வார்த்தை தோரணங்கள்
பழமை மாறா
சாதீய அரசியல்.

சுயமுன்னேற்றம் ஒன்றே குறிக்கோள்
பகடைகாய் மக்கள்
அரசியல் பரமபதம்.

சினிமாவை பின் தள்ளி
சுடச்சுட வியாபாரம்
அரசியல் செய்திகள்.

அனைத்து கட்சி கூட்டங்களிலும்
கட்சிகரை ஆடைகளுடன்
அதே மக்கள்.

தெருவெங்கும் பதாகைகளும் கொடிகளும்
வீழ்த்தப்படும் வாக்காளர்கள்
சாலைவிபத்து.

அறம் மறந்த அரசியலில்
திறம் அறியாமல்
ஓட்டு வங்கிகள்.

அனல் பறக்கும் பிரச்சாரம்
கானல் நீராய்
வாக்குறுதிகள்.

சாலைகள் முலாம் பூசப்பட்டு
குறைகள் கேட்கப்பட்டன
அரசியல் தந்திரம்.

வேட்பாளர் பணிந்து வணங்கிடும்
கடவுள் வாக்காளர்
தேர்தல் திருவிழா.

கவிஞர் சாந்தாதேவி
சென்னை

# கட்டணம் இல்லா ஒளி

கிழக்கு திசையில் இருந்தே பிறக்கிறாய்
திசை எங்கும் தீரா ஒளியை தந்து செல்கிறாய்
தரணியே உன் கதிரொளியால் மின்னுகிறது
எழிலை தரும் கதிரவா.

இருளை நீக்கி விடியலை தந்து
உலகம் முழுதும் கட்டணம் அர விடாது
ஒளியைப் பரப்பி செல்லும் கதிரவா.

மனிதனுக்கு மாற்றத்தை வாழ்வில் தந்து
உயிரினங்களுக்கு வெளிச்சத்தை கொடுத்து
மலர் மொட்டுகளை விரிய வைக்கும்
இதமான சூரியனே.

உனக்கு என்ன நடந்து இப்போது
யார் மேல் உனக்கு இந்த கோவம் சொல்?
இன்றய உன் கதிர் வீச்சை சமாளிக்க முடியவில்லை.



மாற்றம் தந்த நீயே மயக்கத்தை தருகிறாய்
உன் வெப்பம் உடம்பை எரிக்கிறது
உலகத்தை ஒடுங்க வைக்கிறது.

உன் கோபத்யை தணிய வை
மனிதன் என்னை தழைக்க வை
கோபம் இல்லாது குணமாய் எப்போதும்
எம்மோடு நடத்து கொள்
அழகிய கதிரவா.

கவிஞர் நகூர்தீன் நப்ரீஸா
அனுராதபுரம்

# ஒன்றுமே புரியவில்லை

என்ன எழுத தெரியவில்லை
ஏனிந்த மாற்றம் புரியவில்லை
எழுதுகோலை எடுக்கவோ தோணவில்லை
நானா இப்படி என்று குழப்பநிலை
மாதங்கள் பல கடந்த நிலை
எனது கவிதைகள் இங்கே வந்து
பல மாதங்கள் ஆனது.
ஏன் என்று புரியவில்லை
தடுக்க யாருமில்லை
இருந்தும் ஏன் எழுதவில்லை
என்று தெரியவில்லை
இனிவரும் வாரத்தில்
எனது கவிதைகள் இடம் பெறுமா
தெரியவில்லை
ஆனால் எழுதுகோலை
கையில் எடுத்து இருக்கிறேன்.
இந்த கிறுக்கலில் இருந்து
மீண்டும் எனது பயணம்
தொடருமா தெரியவில்லை
தொடரும் என்ற நம்பிக்(கையில்)



கவிஞர் சுமதி தசரதன்

# என் பேரானந்தமே

என் தாட்கு நிறைந்த வெற்றிகளில்
முதன்மை நீயடா.

என்னோடு அன்றிலாய் நிற்க
யாக்கையாகி திழைத்தோமடா.

வளர் முதலாய் இளம்பால் வற்றிட
கா வாகியே அடுத்த நிலை உணர்கிறேன்.

காதலை நீட்டிட நீ பற்றும் சிமயம்
வரையில் யானும் உடனே பயணமாய்.

சந்து வாசம் வீசிடவில்லை.
வியர்வை துளி வழியும் நின் ஆடைதனில்
நிறைந்த பிரியமாய் இருந்தும்.

நுகரும் பேதையாய் அருகில்
வர ஆவலாய் தொலைதூரத்தில் நின்றே

பார்வையிலேயே கொஞ்சிடுவதாய்
கனாவில் கழிக்கிறேன்.
வாழ்வுதனை உனக்கான இலஞ்சியாய்.

என் அகழியாய் நீ இருக்க
ஊற்றாய் உருவெடுத்தே அருவியாய்
திவலையாய் நின்னை சுற்றி
பாண்டிலடிக்க மிகுதியில்
பேரானந்தம் பொழிவதாய் உணரும்
உன்னவள் நான்.



கவிஞர் சு.கார்த்திகா பழனி

# பிரியமான ஆசிரியை

பயணித்த நாட்களிலே
கடந்து வந்தவர் பலர் எனினும்,
உம்மை போன்ற ஒருவரை
பார்த்ததுமில்லை
இனி பார்ப்பேனோ?
தெரியவில்லை



உம்மை பார்த்து
பழகிய நாட்களை விடவும்
உம்மை கண்டு வியந்த
நாட்களே அதிகம்

ஆயிரம் கவலைகள்
உமக்குள் இருப்பினும்
ஒருநாளும் நீவிர்
புன்னகைக்க மறந்ததில்லை

உம்மிடம் இருந்து கற்றவை
ஏராளம் எனினும் கற்றுக்கொடுப்பதில்
என்னவோ நீவிர் தாராளம்

கற்றுக்கொள்கிறேன்
என்பதைவிடவும்
கற்றுக் கொண்டிருக்கிறேன்
என்பதே நிதர்சனம்

இறைவனிடம் பிரார்த்திப்பதென்றும்
ஒன்றே !
உமது கவலைகள் யாவும்
பனிப்போல விலகிடவும்

மலர்ந்த மலர்கின்ற மலரும்
என முக்காலமும் உணர்த்தும்
புன்னகையை மட்டுமே
இவ்வுலகம் சேவிக்கட்டும்

என்றும் என்றென்றும்
என்னுள் எனது பார்வையில்
நீவீர் சிங்கப்பெண்ணே!

கவிஞர் ஜோ.மஞ்சு மருங்கூர்

# பெற்றோர்

அகத்திற்கு  இரு விழிகள் போல்
நம்வாழ்வை அலங்கரிக்க வந்த
இரு ஜீவன்கள்

ஆயிர வார்த்தைகளில் யாரை பற்றி
எழுதினாலும்
என்னை எழுதியவர்களுக்கு
நான் என்ன எழுத இங்கு.

எத்தனையோ உறவுகளை தேடி
சென்றாலும் என்னை தேடி வருவது
எனது தாய் தந்தையர் மட்டுமே
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
எதற்கும் ஈடு இணையற்ற தெய்வங்களே.



எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல்
என் ஆசைகளை நிறைவேற்றித் தந்த
எனது உயிரானவர்களே
உங்களது ஆசை கனவுகளை

புதைத்து கொண்டு உங்கள் பிள்ளையாகிய
என் ஆசைகளை நிறைவேற்றித் தந்த
எனது  உலகமே.
என்றும் உன் பிள்ளையாக.

கவிஞர் டிரோன் மரீஸி

# நடமாடும் நிமிடங்கள்



தலையொன்றும் பாரம் இல்லை
தலைவலி ஏனோ?

களைப்பை மறந்து கடமையாற்றும்
கணினி அல்லவே.

ஓய்வெடுக்க மறக்காதே.
ஒத்தடமும் மறவாதே

உன் பேச்சு தலைக்கு மேலே
தவிடுபொடியாய் புரிதல் இன்றே.

காலச்சுவடுகளில்
கவலையும் தலைவலிதான்

நாளை வலி போகிவிடும்.
நடமாடும் பைங்கிளியே

நந்தவனம் கூப்பிடுது
நடைபயணம் போய் வாயேன்

அலை அலையா கனவு
கலை கலையா நினைவு

தினம் தினம் களிப்போடு
இலை போடா சாப்பாடு

மகிழ்வோ வருத்தமோ
மனதுவிட்டு பேசிவிட்டு

களிப்போடு கடப்போம்
சலிப்பை தவிர்ப்போம்

நட்புறவுடன் சிலகாலம்
சிலந்திகளாய் சிந்திப்போம்.

சிகரம் தொட வேணாம்
சிந்தையும் தொலைக்கவேணாம்

தலை கணத்தை இறக்கி வைப்போம்
புலம்பல் சில நேரம் அலம்பல் சிலநேரம்.

மன கணத்தை மதிப்போம்
வாழும் கணங்களிலே.

வானம்பாடியாய் கதைப்போம்.

கவிஞர் வ.சு.கலைவாணி
நெய்வேலி

# பெண்

அன்பை பொழிவதால் அன்னை இவள்
ஆனந்தம் தரும் இல்லத்தரசி
இனிய மழலையில் மகளானவள்
ஈடில்லா சாதனை பல புரிபவள்
உலகம் என்றுமே தன் குடும்பம்தானே
ஊரே மெச்ச வம்சம் காப்பாள் - ஆனால்
என்றுமே தன்நலன் பேணாதவள்
ஏணிதானே தன் மக்கட்கு எப்பொழுதும்
ஐயமில்லை,படைத்து காத்தலால் இவளும் கடவுளே
ஒன்றை பலவாய் பெருக்குவாள் - ஆனால்
ஓய்வு மட்டுமே அறியாதவள்
ஔடத்தில் ஔவை இவள்
எஃகு போன்ற மனதினால்
ஏற்றம் பெற்றது உலகமே!



கவிஞர் லெ.சரவணன்
சிதம்பரம்

# சிமாறு சிந்தையில்

சிரமாறு சிந்தையில் வைத்தே
சிரமமறு மனமே

சிரமாறு கொண்டவன் தாழ் பணி
சிற்றுயிரும் முக்தியுரும் வழியிதுவே மனமே

சிரமாறு கலந்தநல் அரிதுயில் பாதம்
தழுவி கசிந்தொழு நற்பேறு கிட்டும் மனமே

பருவங் கரைவதும் பால்நிலவில்
நித்தமும் நித்திரை கரைவதும்

நிந்தை கர்மஞ் சுமந்து நிற்பதும்
நீங்கிட கசிந்துருகு மனமே!



கவிஞர் ஜெயப்பிரபா சென்னை 81

# பூக்கள்

பொன் வைக்கும் இடத்தில் பூ, வை என்பார்கள்.
வண்ண வண்ண பூக்களே வசந்தத்தின் அடையாளமே!
வாச மலர்கள் அன்பின் அடையாள சின்னங்களே!
நம் வேண்டுதல்களை ஆண்டவனிடம்
தூது போவது நறுமண மலர்களே!
பத்மத்தில் உறைபவள் மகாலட்சுமி.
அதனால்தான் என்னவோ
தாமரை மலர்களுக்கு தனிப்பெரும் சக்தி.
சாமந்தி, முல்லை, மல்லி சம்பங்கி தாழம்பூ,
செவ்வரளி, இருவாச்சி என பலதரப்பட்ட மலர்கள்
இறைவன் திருவடிக்கே பூத்துக் குலுங்குகின்றன.
நவகிரகங்களுக்கும் தனித்தனி வண்ண மலர்கள் பிரசித்தமே!
கருணை கண் கொண்டு நம்மை பார்க்கும்
திருமாலின் திருவடியை அலங்கரிக்க
துளசித்தலமே மேன்மையானது
இட மார்பில் அமர்ந்திருக்கும் மகாலஷ்மிக்கும்
பிடித்தமானது கனகாம்பர பூவே.
மங்கையரை பூவையர் என்று சொல்வதுண்டு.
காரணம் பூவை போல மென்மையான உள்ளமும்
உடல் தேகமும் கொண்டவள்.
என்னதான் ஆபரண அலங்காரங்கள் என்றாலும்
வண்ண மலர்களுக்கு இணை ஏதேனும் உண்டா?
நம் இந்திய தேசத்தில் மட்டுமே வருடம் எல்லாம்
விதவிதமான பூக்கும் மலர்களை பார்க்கலாம்.
பூக்கள் மூலமே மகரந்த சேர்க்கை ஏற்பட்டு
நமக்கு காய்கனி என்று கிடைக்கிறது.
நமக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும்
கொடுப்பது வண்ண மலர்களே.
நம் நாட்டு தலைவரான நேருஜி அவர்களுக்கு
பிடித்தமானது ரோஜா மலரே
அவர் சட்டையில் எப்பொழுதும் அணிந்து கொண்டிருப்பார்.



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி ஊத்தங்கரை

# நீளும் பயணம்




ஆசைகள் எல்லாம்
நிராசையாகிப் போகையில்தான்
நம்மிடம் இருப்பது
பேராசையோ என்று தோன்றும்.
பயணங்கள் சுவாரஸ்யமானது;
அதன் நீட்சி போல

கடல் தாண்டி கண்டம் தாண்டி
நாடு தாண்டி
கிரகம் தாண்டி என்றில்லை;
என்னுடைய ஆசை.

வீடு தாண்டி வீதி தாண்டி
நாட்டுக்குள்ளே போதும் போதும்.
நடுக்கடலெல்லாம் நமக்கெதுக்கு
நானொன்றும் கொலம்பஸ் இல்லையே.

தனிமை தடையானது பெண்ணாணதால்.
நமக்குத் துணையாயிட
பிணைக்கைதிகள் யாருமில்லை.

மிதக்கும் மேகம் அடர்ந்த காடு
கொட்டும் அருவி சொட்டும் மழைத்துளி
வானின் வனப்பும் குன்றும் குளியும்
வண்ண மலர்கள் வியக்கும் விலங்குகளாய்
எத்தனை எத்தனையோ.
ரசிக்க மனமிருந்தாலும்
அதை புசிக்க விதியில்லை நமக்கு.

கற்பனையில் வாழ்வதா?
வேண்டாம் வேண்டாம்
அதை எங்கும் விற்பனையும் செய்ய முடியாது.
காலத்தை சாட்டி
ஜாலத்தை பொய்யாக்கிட முடியுமோ?

பௌர்ணமியோடு ஒரு படப்பிடிப்பு,
மலர்களில் பூரிக்கும் வண்டாக,
காற்றோடு ஸ்பரித்து கை கோர்த்த ஒரு நடை.
மெல்லிசைகளோடு மெதுவாய் ஒரு அலசல்.
மணல் கோட்டையும் கடலோர சிப்பியும்.
இப்படி எப்படி எப்படியோ.

பேராசை தானே சுருக்கிட முடியாமல்
பெருகிக் கொண்டே நீள்கிறது.
என் பயணம்

கவிஞர் சிரோஸி அஸானா அக்பர்
அநுராதபுரம்(இலங்கை)

# நீயே ஒளி

திக்கு தெரியாத காட்டில்
தன்னந்தனியாய் ஒரு கூட்டில்
புகை சூழும் நேரத்தில்
கைக்கெட்டும் தூரத்தில்
மின்மினி கள் ஒளியிலே
மின்சாரம் கண்ணிலே
நல்லதொரு பாதையிலே
ஆதியுமாய் ஆகி
அனைத்துமாய் நின்று
அகத்தினுள் நுழைந்திட்ட ஒளியே
உன் திருவடியை பற்றினேன்
சிந்தையில் உன்னை வைத்தேன்
நித்தமும் உன்னை தரிசித்தேன்
சிவமாய் நீ இருக்க
தவமாய் நான் காத்திருப்பேன்
உன்னுள் வந்து ஒளிர்ந்திடவே.



கவிஞர் குணசுந்தரி சிவா
காஞ்சிபுரம்

# பக்குவம்

நீண்ட சுவரின் மீது
ஓடிய அணிலின்
தலைக்கு மேல் ஆடிய
கொய்யாவின் வாசமது
மதிலையும் தாண்டவிடாது
நடுநிலைப் படுத்துகிறது.

எகிரிப்பிடித்து தின்று தீர்க்காமல்
கிளையை வளைத்து
ருசித்து புசித்து
கீழ்கடித்து சிதறடித்தும்
அரைகுறை கடியில் கிளை விட்டும்.

கடித்து கொதறிய கொய்யாவில்
சிதறிய கொய்யா
மாமுலான மதில் மேல் பூனையில்லாம
மதில் கீழ் மேல் தூக்கி வாயை பிளந்து நின்றது
அதற்கா அரைகுறையாய் தின்றது அணில்.



தின்றும் திண்பதில்லாமல்
இழுத்த கிளையை விட்டு
சென்றது அணில்.
சுவர் ஏறாத கரும்பூனைக்கும்
தலைக்குமேல் கூவும் குயிலுக்காகவும்

தனது பசியால் புரியவைத்துவிட்டு
நீள சுவரை
தாண்டிக் கடக்கிறது
வாலாட்டிக் கொண்டே
பக்குவம்.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்
நாகப்பட்டினம்

# ஆவல்

ஆவல்தான் எனக்கும்
அம்மாவின் மடியில்
துயிலவே!

ஆவல்தான் எனக்கும்
அம்மாவின் மடியில்
அமர்ந்து பசியாறிடவே!

ஆவல்தான் எனக்கும்
அம்மாவின் மடியில்
அமர்ந்து கதைகள் பல பேசிடவே!



ஆவல் தான் எனக்கும்
அம்மாவின் மடியே
சொர்க்கமென்று தினமும் கிலாகிக்க!

ஆவல்தான் எனக்கும்
அம்மாவின் மடியில்
அம்சமாய் கண்ணயற!

ஆவல் தான் எனக்கும்
அம்மாவின் மடியை
யாருக்கும் விட்டுக் கொடுக்காதிருக்க!

ஆவல்தான் எனக்கும்
அம்மாவின் மடிக்காக
சகோக்களுடன் வாதிட்டு
எனதாக்கிக் கொள்ளவே!

ஆவல்தான் எனக்கும்
அம்மாவின் மடி
என் ஆயுளுக்கும் கிடைத்திடவே!

கவிஞர் இரா.கோமதி
பொள்ளாச்சி

# முதல் காதல் நீ

என் ஆசை உன்னோடு
எதிர்பார்ப்பு பெண்ணோடு
காதல் என் கண்ணோடு
அழகான பெண்ணோடு
ஆளான கண்ணோடு
வார்த்தைகள் நெஞ்சோடு
பேசாத என்னோடு
எதிர்பார்ப்பு நெஞ்சோடு
காத்திருப்பு உன்னோடு
காலங்கள் என்னோடு
அழகான உன்னோடு
அருவி போல் உன் அன்போடு
அசைந்தாடும் காற்றோடு
என் நெஞ்சம் உன்னோடு
நீதானே என்னோடு
உன் வாழ்க்கை யாரோடு
உனக்காக நான் நடுரோடு
நிம்மதியே தொலைவோடு
நிஜம் தானே பெண்ணோடு
நீ வருவாய் என்னோடு
எதிர்காலம் உன்னோடு
எல்லையில்லா அன்போடு



கவிஞர் செ.எ.தாரா
சேலம்

# காயங்களின் கண்ணீர்

சொல்ல முடியாத கண்ணீர் துளிகள்
தினம் தினம் கடமையும் திறமையும் இழந்து
பல வலிகளின் பின் விடை இல்லாமல்
ஒவ்வொரு மனிதன் வாழ்க்கை பின்னணியும்
பின்னூட்டம் இல்லாமல் பின்னோக்கியே
இங்கு ஏற்றத்தாழ்வின் இடைவெளியில்
இரக்கமில்லாமல் இறுதிவரை இலக்கும்
இப்படிப்பட்ட காலத்தில் பின்புலம் இல்லாமல்
ஒவ்வொரு மனிதனையும் பித்தனாக
ஏதோ ஒரு சூழ்நிலை தாக்கம் அவனது
வாழ்க்கை நிலையை கண்ணீர் வடிவம் ஆக்கி
களம் காணவே கடவுள் என்ற ஒருவன்
மனிதனாக படைத்து விட்டான் பிரபஞ்சத்தில்
ஒவ்வொரு நல்லவனையும்.



கவிஞர் ம.செல்லமுத்து நூர்த்தப்பூர்

# உண்ணாமையின் உன்னதம்

பசியே துவக்கம்
பசியே இயக்கம்
பசியே ஆக்கம்
பசியே ஊக்கம்

பசி என்பது யோகம்
பசி என்பது யாகம்
பசி என்பது பூதம்
பசி என்பது நாதம்



பசியே பிணி
பசியே மருந்து
பசியே பேதம்
பசியே வேதம்

எல்லாம் அதனுள் அடக்கம்
ஞானத்தீயை வளர்க்கும்
ஐம்புலனும் விழிக்கும்
வைராக்கியம் தோற்கும்

விரும்பி ஏற்றால் நோன்பு
இல்லாவிட்டால் அதுவேவேம்பு
உயிர் வளர்க்கும் உணவு
மறுதலித்தால் புரியும் மாண்பு

உயிர்களின் வலி புரிய நோன்பிரு
அவர்தம் பிணி புரிய நோண்பிரு
எல்லாம் இருந்தும் இல்லாமலிரு
இருந்தாலும் ஈந்து தவமிரு

புதுப் புது அர்த்தம் விளங்கும்
புதுப் புதுப் பாதை துலங்கும்
தேகம் புதுப்பொலிவோடு பிறங்கும்
வேதம் யாவும் உன்னுள் இறங்கும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி


## பெரியாழ்வார் தொடர்ச்சி 8

பெரியாழ்வார் மூன்றாவது பத்ததனில் ஒன்பதாவது
திருமொழியில் ராமகண்ண அவதார லீலைகள்
இருதோழியர் உரைத்தார்போல் பதினொன்று வட்டித்தார்!
முன்பத்து கலித்தாழிசை! ஈற்றமைவு தரவான
கொச்சகத்துக் கலிப்பாவே! செஞ்சுருட்டி ராகத்தை
ரூபகப்பேர் தாளத்து இன்னிசையில் அமைந்ததுவே!
பத்தாவது திருமொழியில் அனுமன்தன் தூததனில்
சீதையிடம் அடையாளம் கூறுவது பத்தமையும்!
அத்துணையும் கலிவிருத்தம்! கல்யாணி ராகத்தே
ரூபகப்பேர் தாளத்தில் பாவமைப்பு நல்லினிமை
சேர்த்திடுமே! மூன்றான பத்தமைவு முற்றிற்று!
நான்காவது பத்ததனில் ஒன்றாவது திருமொழியில்
ஈரைந்தும் நாரணனைத் தேடியவர்கள் கண்டதனின்
உரையாடல் அறுசீரில் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தமதே! தோடிராக அடதாள இணைவினிலே
பாடகேட்க மாலருளை மட்டின்றிக் கூட்டிடுமே,!
தொடரிரண்டில் பதினொன்றும் திருமாலிருஞ் சோலைமலை
சிறப்பெல்லாம் கலிநிலைத்துறை அமைவினிலே அடாணாபேர்
ராகமதில் ஜம்பையாம் தாளத்தே கேளிசையே!
நான்காவது பத்ததனில் மூன்றாவது திருமொழியில்
மலைசிறப்புத் தொடர்ச்சியாக பதினொன்றும் கலிநிலைத்துறை
சீரமைப்பில் ஸஹானாபேர் ராகமதில் ரூபகந்தான்
தாளமதில் இயற்கைதன் வருணனையில் மாலவனின்
சீருரைக்கும்! நான்காவது திருமொழியில் பதினொன்றும்
திருக்கோட்டியூர் அனுபவிப்பைக் கொண்டாடல் செய்யாதார்
இழிவுரைத்தல்! எழுசீரில் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தப்பா நாதநாமக் கிரியைப்பண் அடதாள
அமைவதுவோ கோட்டியூரார் சீருரைக்கும்! வைணவநெறி
மாலருளை மன்பதையோர் நண்ணுவரே! பெரியாழ்வார்
தொடர்ச்சியது மேலும்வரும்! பாச்சுவையில் மகிழ்வோமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

புத்தகப்பை சுமந்து பள்ளிசென்ற பருவத்தில்
'பை'யெனும் மாறிலியைப் பயின்றிட்டோம் கணிதத்தில்!
இருபத்தி இரண்டின்கீழ் ஏழெனும் பின்னமாயும்
இருதசமத் தானத்தில் மூன்று புள்ளி
ஒன்று நான்கெனவும் மதிப்பினை உள்ளிட்டோம்!
வட்டத்தின் சுற்றளவை விட்டத்தால் வகுத்தால்
கிடைப்பது பையாகும்! பண்டைய காலத்தில்
பையின் மதிப்பு வெவ்வேறாய் இருந்துளதே!
பாபிலோனியர்கள் காலத்தில் பையின் மதிப்பினை
மூன்றெனக் கொண்டார்கள் என்றறிய முடிகிறதே!
கணினிகளின் திறனறிய பையின் மதிப்பைக்
கணக்கீடு செய்வதை அடிப்படையாய்க் கொள்கின்றார்!
அதிவேகக் கணினிகள் துணைக்கொண்டு கணக்கிட்டால்
நூறுகோடி தசம இலக்கங்கள் வரை
துல்லியமாய் அறிய முடிகிறதே இந்நாளில்!
வட்டம், நீள்வட்டம், உருளை, கோளமெனும்
வடிவங்களின் பரப்பளவு, கனஅளவைக் கணக்கிட
பையே துணைநிற்கும்! பையின்றிக் கணிதமில்லை!
உலக பைதினமாம் மார்ச் பதினான்கில்
பையினை நினைவுகூரும் மாணவராய் மாறுவோமே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# ஒரு சொல் கேளீர்!

குடிக்காதே குடிக்காதே என்று எத்தனைமுறை
கூவினாலும் காது கொடுத்து கேட்காது
குடிக்கின்ற குடிமகனே, இந்திய குடிமகனே,
குடிப்பதற்காகவே குடிமகனாய்த் தோன்றினையோ சொல்வாய்நீயே!

குவலயமதில் குடிக்கின்றார் மேலை நாட்டார்;
குடிக்கின்றார் கீழை தேசத்தும் வாழ்வோரெல்லாம்!
குடிக்ககூடா தோயானிங்கு  எனநீகேட்பது
காதில்வந்து மோதுவதால் கலங்குவன் யானே!

குடிப்பதில் என்னவின்பம் இருக்கிறது என்று
குடிக்கின்றாய் அறியேன் நானும் என்றாலும்
குடிக்கின்ற உன்னிடத்தில் சொல்வேன் ஒன்று;
குடித்துப்பார் கூவம்நதி தீர்த்தத்தை வாய்ப்பிருந்தால்;

கொடுக்காது அதுவுந்தீமை நீகுடிக்கும் தண்ணிபோல!
நீகுடிக்கின்ற தண்ணி குடிக்கும் உந்தனுயிரை;
நீகுடிக்கின்றாய் அதனையறிந்தும் அறியாததைப்போல;
குமுறுகிறேனுன திந்தவேமாற்றும் வித்தைக்கண்டே!

குடிக்கின்றாய் உந்தன்பணி சுமைமறக்க  என்றுநீ
கூறிடும் பதிலும் ஏற்பதற்கில்லை சான்றோரால்;
குடியைவிட்டு விடுவில்லையெனில் லதுகுடிக்குமுந்தன் ஆருயிரை;
குடியினை யதனால் விட்டுவிடு! விட்டுவிடு!



குடிப்பதை நீயும் விட்டுவிடு என்றிந்தகுமரன்
கூவுகிறேன் தமிழ்ச்சொல் கவிதொடுத்து உனக்காய்!
குவலயமதில் குடிக்கத் தண்ணீர் தராதோர்,
குடிக்கத் தண்ணி தேவைப் படுவதாலே
குடிக்கூலிபெற்றோர் தம்குடியழிய விற்ன்றார் வீதிகளில்;
குடிகாக்கும் கடனுள்ள அரசுங்கூட பணம்பார்க்க
கடைகளை நடத்தி பரபரப்பாய் இயங்குகிறது!

கவியில்கூட குடிக்காது என்றெவர் உரைத்தாலும்
குற்றமெனவதை சொல்லும் கொடுங்கோலர் ஆள்கின்றாரே;
குமரியில்நின்று தவமியற்றும் வள்ளுவனாரே உமக்கேவெளிச்சம்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# நிலா மகளுக்கு ஒரு தோழி

## நூல் வாசிப்பு

ஆசிரியர் : இரா மதிராஜ்
தொகுப்பு : கவிதைகள்
முதல் பதிப்பு மார்ச் 2024
வெளியீடு இயக்கி பதிப்பகம் சென்னை
விலை ரூபாய் 120

தனியார் நூல் ஆலையில் உற்பத்தி மேலாளராக பணிபுரியும் அன்பு நண்பர் இரா மதிராஜ் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இது. எல்லோரது இனிமையான பருவமாகவும் மறக்க முடியாத நினைவுகளைச் சுமந்த பருவமாகவும் விளங்கும் இளமைப் பருவத்தின் மீள் பார்வையில் தனது பள்ளி ஆசிரியர்களை நினைவு கூறும் கவிஞரின் மனதில் எப்போதும் போல காதலும் தாயன்பும் பெருங்கருணையும் இயற்கை மீதான பிரியமும் பீறிட்டு வருகின்றன.

தீர முடியாத தவிப்புகளில் வட்ட நிலாவின் வெளிச்சத்தை எண்ணியபடியும் ஆனந்தக் கூத்தாடும் தருணங்களில் நிலவை தனது துணை எனக் கண்டும் பேசியும் பார்த்தும் ரசித்தும் தன்னை உயிர்ப்பிக்கும் மனதில் இருந்து நம்மை குளிர்ச்சிப்படுத்துகின்றன கவிதை வரிகள்.

தான் அறியாமல் தரையில் சிந்தும் பொருட்களின் வழியே உலகில் பல் உயிர்கள் உயிர் வாழ்வதை ஈகை எனச் சொல்லி

"திறமைகள்
வெற்றி பெறுவதற்கு
மாத்திரம் போதும்
உலகம்
இயங்குவதற்கு போதாது" என்று தன்னைத்தானே உணர வைத்துக் கொள்ளும் அன்பில் உயிர்கள் வாழத் தேவையான ஈரம் கசிகிறது.

ஒற்றை மரத்தை வளர்த்திடும் கரங்களின் வழியே நீளும் வேர்களைப் பற்றி கவலைப்படாதீர்கள் அவைகள் ஒன்றாய் தான் இணைந்திருக்கும் என்ற வரிகளின் வழியே நிகழ்காலப் போக்கின் நிதர்சனத்தை உணர்த்துகிறது கவிஞரின் மனம்.

இளையவன் சிவா நரசிங்காபுரம்

## நூல் வாசிப்பு

காலச்சூழல் கண்ணெடுத்தும் பாராமல் உலகத்தைக் கட்டி இழுத்து ஓடிக் கொண்டிருக்கும் பொழுதில் கிணறுகளின் தேவையோ சடங்குகளின் நிலைமையோ எண்ணிப் பார்த்திட இயலுவதில்லை. காலப் பெருவெளியில் உலவிக்கொண்டிருக்கும் நிலையில் நிற்பதை வேதனையோடு கண்ணீர் வடிக்கிறது கவிஞரின் உள்ளம்.

தாய்ப்பாசத்தை அனுபவித்த மனங்களில் உயர்ந்த நிற்கும் அம்மாவின் சித்திரம் எத்தனை காலம் ஆயினும் அழியாது வளர்ந்து கொண்டே இருக்கும். அன்னையின் அவசியமும் கருணையும் பெரிதாகப்படுவதை கொண்டாடித் தீர்க்கிறது இக்கவிதை

"அன்னையை இழந்த
பிள்ளைகளாலேயே
அதிகமாக
கொண்டாடப்படுகிறது
இங்கு அன்னையர் தினம்""

எல்லோருக்கும் அவரவர் அம்மாவை கொண்டாடி தீர்க்கும் வேளையில் தனது இறுதிக் காலம் வரை உடன் வரவேண்டும் அம்மாவின் பாசமும் பந்தமும் என்ற தீராக் கனவு ஒலித்துக் கொண்டே இருக்கும் வகையில் அம்மா உயிரோடு இருந்திருந்தால்

"நெடுநாள் எரியாமல் இருக்கும்
முகப்பு விளக்கு சரி செய்யப்பட்டு இருக்கும் ஆம் அம்மா உயிரோடு இருந்திருந்தால் நானும் கூட ஒரு முறை மன்னிப்பு கேட்டிருப்பேன்"

என்று அக்கவிதையை முடிக்கும் தருணத்தில் எத்தனையோ முறை அம்மா சொல் கேட்காமலும் தான்தோன்றித்தனமாக தான் செய்த செயல்களை எண்ணிப் பார்க்க விளைகின்ற மனத்தை ஆற்றுப்படுத்துதல் அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

காதல் உள்ளத்தில் பூக்கையில் காணும் உயிர்கள் எல்லாம் புன்னகை வாசம் வீசத் தொடங்கி விடும். நெஞ்சுக்குள் சொற் குவியல்கள் வந்து விழுந்து அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபி என வார்த்தைச் சிற்பங்களை வடிக்கத் தொடங்கிவிடும்.

இளையவன் சிவா நரசிங்காபுரம்

"எப்போது திறக்கும் என
எதிர்பார்ப்பது
சொர்க்கவாசல் மட்டுமல்ல
உன் வீட்டு
வாசலும் தான்"

என்று தவம் கிடக்கும் கவிஞரின் காதலும் அப்படியானதொரு ஆனந்தத் தருணத்தை நமக்குள்ளும் எழுதிச் செல்கிறது.

"இதுவரை
எழுதாத கவிதைகள்
அனைத்தும்
இயற்கையிடமே
இருக்கிறது " என்ற கவிதை.

இயற்கைக்கும் மனித உயிர்களுக்கும் இடையிலான பந்தத்தை விட இயற்கைக்கும் பூச்சிகளுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான பந்தம் மிகப்பெரியது. காலச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மனிதர்களைவிட சிறு உயிரிகள் முன்கூட்டியே உணர்ந்து கொள்ளும். அந்த வகையில்

"மழைக்கு மறுநாள்
நடக்கும் போது
முன்பு வந்து
ஒரே இடத்தில்
தரை இறங்காமல்
வட்டமடிக்கும் அந்த
வண்ணத்துப்பூச்சி
சொல்கிறது
இன்னும்
சில தினங்களில்
பசுமையைக்
காணலாம் என்று "




இயற்கையின் பிரசவத்தை முன்கூட்டியே நமக்குச் சொல்லி ஆனந்த கூத்தாடுகிறது வண்ணத்துப்பூச்சி.

இளையவன் சிவா நரசிங்காபுரம்

# நிலா மகளுக்கு ஒரு தோழி

## நூல் வாசிப்பு

வாழ்வெனும் வானத்தில் நட்சத்திரங்களும் மின்னுகின்றன நிலாவும் அழகு காட்டுகிறது. இவரின் நிலா மகளுக்கு ஒரு தோழி அவ்வாறு கவிதையின் வழியே வானவில் தருணங்களையும் படம் பிடிக்கிறது வாழ்வியல் அழகியலையும் காட்சிப்படுத்துகிறது வறுமையின் தாண்டவத்தையும் கூறுகிறது. சிறப்பான கவிதைகளை எழுதிச் சென்று இருக்கும் நூலாசிரியருக்கு வாழ்த்துகள்.




இளையவன் சிவா
நரசிங்காபுரம்

# ஆகாயத்தில்...

## அத்தியாயம் 1(a) (சிறு நவீனம்)



அவனுடைய சைகையைப் புரிந்துகொண்ட இந்துமதி அவனோடு அந்த அறைக்குள் நுழைய, கதவைத் தாழிட்டுக்கொண்டவன், "ஏன் இந்துமதி மிகவும் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தாய்... என்ன விஷயம்?" என்று கேட்டான்

"தமிழ். நீங்கள் என்னை விட்டு ரொம்ப ஒதுங்கிப் போகிற மாதிரி தோன்றுகிறது"...அவள் குரல் கொஞ்சம் கம்மிப்போயிருந்தது.

"இதோ இருக்கின்ற குவைத் நாட்டிற்கு தொழில் வளம் பற்றி தெரிந்துக் கொள்ளப் போகிறேன். ஒருவாரத்தில் திரும்ப வந்து விடுவேன். இதற்காகப் போய்....."கொஞ்சம் அலுத்துக்கொண்டான் தமிழரசன்.

"அதற்கில்லை தமிழ், நாம் சந்தித்த அந்தக் கிராமம், அங்கே எனக்காக காத்திருந்த கணங்கள். நீங்கள் அரசியல்வாதியான பிறகு எல்லாமே காணாமல் போய் விட்டது"

"எனக்காக ஒருமணி நேரம் கூட ஒதுக்கமுடியாமல் போனதுதான் ஆச்சரியமாக இருக்கிறது"

"என்ன செய்யட்டும் இந்து. எல்லாம் நம்முடையை எதிர்கால வாழ்க்கைக்காகத்தானே...."

"இப்போதைய இளமையைத் தொலைத்துவிட்டு நாளைய வாழ்க்கைக்கான துரத்தல் தேவையா தமிழ்"

"நம் வாழ்க்கை முறையின் அடிப்படை இதுதானே.!... அதில் நாம் மட்டும் விதிவிலக்கல்லவே.. வரட்டுமா?"

அவன் கிளம்ப எத்தனித்த போது "ம்... எல்லாமே மறந்தாச்சு. என்றைக்கு காதலை வெளிப்படுத்தினோமோ அன்று பேசியதைக் கூட மறந்தாச்சு" என்று இந்துமதி சிணுங்க, ஒரு நிமிடம் யோசித்தவன் அருகில் வந்து "வெரி சாரி" என அவளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு " உனக்கு என்ன பரிசு வாங்கி வரவேண்டும் இந்துமதி" எனக்கேட்டான்.

"நீங்கள் என் நினைவோடு திரும்பிவந்தாலே போதும்"

"சே! கேட்டு கேட்டுச் சலித்துப் போச்சு. என்ன வேண்டும் இந்த முறை நான் போவது வெளிநாடு. ஏதாவது ஆசையாக வாங்கி வரலாமிண்ணு நினைக்கிறேன்" என்றான்..அவள் செவ்விதழைப்பிடித்துக் கொண்டு...

இராஜகைநிலவன்

# ஆகாயத்தில்...

## அத்தியாயம் 1(a) (சிறு நவீனம்)

"ஒருமுறை நாம் பல மாதங்கள் பிரிந்து திரும்பச் சந்தித்த போது சொன்ன ஞாபகம் இருக்கிறதா?"


"ம்..கூம்.." உதட்டைப் பிதுக்கினான் தமிழரசன்

"அதுதான் நம்காதல் விவகாரங்கள் தவிர எல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும்"

"ஓகே ஓகே எல்லோரும் கீழே காத்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்லு"

"மண்டியிடுங்கள்"

அமைதியாக நின்றான் தமிழரசன்



...தொடரும்

இராஜகைநிலவன்

# செய்குத்தம்பி பாவலர்

## கட்டுரை

### முன்னுரை



தொடர்பில்லாத பலதரப்பட்ட நிகழ்வுகளை ஒரே சமயத்தில் நினைவில் வைத்துக்கொள்வது 'அவதானம்' அல்லது 'கவனகம்' என்றும் சொல்வார்கள். ஒருவர் ஒரு சமயத்தில் 10 விஷயங்களை செய்துகாட்டினால் 'தசாவதானி'. 32 விஷயங்களை செய்துகாட்டினால் 'சோடஷாவதானி'. 100 விஷயங்களை செய்துகாட்டினால் 'சதாவதானி' (சதம் என்ற சமஸ்கிருத சொல்லானது தமிழில் நூறு என்ற எண்ணை குறிக்கும்).

அப்படி 100 செயல்களைச் செய்தவர் யாரென்று சரித்திரச் சான்று தெரியுமா? அவரே சதாவதானி செய்குதம்பிப் பாவலர்.

### இளமைப் பருவம்

நாஞ்சில் நாட்டு கோட்டாறு பகுதியில் இடலாக்குடியில் அமீனா அம்மையாருக்கும் பக்கீர் மீரான் சாகிபுக்கும் மூன்றாவது மகனாக 1874 ஜூலை 31-இல் பிறந்தார்.

அக்காலத்தில் திருவிதாங்கூர் மன்னர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாஞ்சில் நாட்டில் மலையாளப் பள்ளிகளே நடந்து வந்தன. பிற்காலத்தில் மிகச் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கிய செய்குதம்பி இம்மலையாள மொழிப் பள்ளியில் படித்துத் தேர்ந்தது வியப்புக்குரியது.

### தமிழ் ஆர்வம்

இடலாக்குடியை அடுத்த பட்டாரியார் வீதியில் சங்கரநாராயண அண்ணாவி என்பவரிடம் முறையாகத் தமிழ் கற்றார். இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சியுற்றார். காளமேகப் புலவர், மாம்பழக்கவிச்சிங்க நாவலர் போல அந்தாதியாகவும் சிலேடையாகவும், யமகம், திரிபுகளாகவும் கவிபுனையும் கலை கைவரப் பெற்றார்.

அ வில்சன்
இதழாசிரியர்

## இலக்கியப் பணி

ஞானியார் அப்பாவின் 'மெய்ஞ்ஞானத் திருப்பாடல் திரட்டு' என்னும் நூலை அச்சிட சென்னை 'இட்டா பார்த்தசாரதி நாயுடுவுக்குத்' தமிழறிந்த இஸ்லாமியர் தேவைப்பட்டார். சென்னைச் சென்று அந்நூலைச் சிறப்புடன் பதிப்பித்தார் செய்குதம்பிக்கு, அப்போது வயது 21. அவரது அறிவாற்றலைக் கண்டு ஸ்ரீபத்மவிலாசப் பதிப்பகத்திலேயே பிழை திருத்தும் புலவராக அவரை அமர்த்திக் கொண்டனர். மாதம் ரூ 60/- ஊதியமும் பிற வசதிகளும் செய்து கொடுத்தனர். அவர் வறுமையை மறந்து வாழத் தொடங்கிய காலம் இதுவே. இக் காலத்தில்தான் சிந்தையள்ளும் சிறந்த காப்பியமாகிய சீறாப்புராணத்துக்குச் சீரிய உரையெழுதிப் பதிப்பித்தார். உரை எழுதுதல், பாட்டெழுதுதல், பதிப்பித்தல் மட்டுமின்றித் திருக்குறள், கம்பராமாயணம், சீறாப்புராணம் பற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார்.

## சதாவதானி செய்குத்தம்பி

சென்னையில் 10.03.1907ல் விக்டோரியா மண்டபத்தில் புலவர்கள் அறிஞர்கள் மிகுந்த அவையில், இவரின் தசாவதானி நிகழ்ச்சிக்கு வந்த அறிஞர்களை, இவர்களின் 100 வித நினைவாற்றல் நிறைந்த திறமையைக் கண்டு அசந்தே போனார்கள். அப்போது செய்குத்தம்பி பாவலருக்கு வயது என்ன தெரியுமா? வெறும் முப்பத்து மூன்று மட்டுமே!

## இயற்றிய நூல்கள்

1. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, 2. திருக்கோப்பற்றுப் பதிஞ்சம், 3.பத்தந்தாதி, 4. திருமதினந்தந்தாதி, 5.கோப்பந்துக் கலம்பகம், 6.கோப்பந்துப் பிள்ளைத் தமிழ், 7.கவ்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, 8.நீதி வெண்பா, 9.ஷம்சுத்தாசின் சேவை போன்ற கவிதை நூல்களையும்,
1. தேவலோக பழிக்குள்ள வழக்கு,2. வேதாந்த விபசார பழிக்குள்ள வழக்கு போன்ற வசன நடை காவியங்களையும் எழுதியவர்.

## இயற்றிய நூல்கள்

1. தேவலோக பழிக்குள்ள வழக்கு,2. வேதாந்த விபசார பழிக்குள்ள வழக்கு போன்ற வசன நடை காவியங்களையும் எழுதியவர்.
'யதார்த்தவாதி', 'இஸ்லாமிய மித்ரன்'னு ரெண்டு பத்திரிகைகளையும் நடத்தியுள்ளார்.

## விடுதலைப் போராட்ட விருப்பும் வெறுப்பும்

ஆங்கிலேயர் ஆட்சியினை எதிர்த்துச் சுதந்திரப் போராட்டத்திலும் கலந்துகொண்டார். 1920 நாஞ்சில் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் தொடங்கியபோது அவர் கதருடைக்கு மாறினார். அந்நாளில் நடந்த பெரும்பாலான கூட்டங்கள் பாவலர் தலைமையில் நடந்தன. ஜீவா, திரு.வி.க. மாதிரியான தலைவர்கள் பாவலர் பேச்சுக்கு ரசிகர்களாக இருந்துள்ளார்கள்.

பாவலர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டதால் சிலர் வெறுப்பும் கொண்டனர். நாகர்கோயில் பகுதியில் பேருந்து அதிபராக இருந்த ஒருவரின் பேருந்துகளில் பாவலர் எங்கும் எப்பொழுதும் இலவசமாக ஏறிச் செல்லும் உரிமைதந்து சிறப்பிக்கப்பட்டிருந்தார். அவரது விடுதலைப் போராட்டத்தின் காரணமாகத் தமது வண்டியில் போவதற்குத் தடை விதித்தார் அவர்.

## இறப்பும் இரங்கலும்

1950 பிப்ரவரி 13-இல் பாவலர் காலமானார். அறிஞர் பலரும் கலந்து கொண்ட அந்த இரங்கற் கூட்டத்துக்குக் கவிமணிதேசிக விநாயகம் பிள்ளை தலைமை தாங்கினார்.



நாளை

# நமதே

## பணத்தால் சாதிக்க முடியாததை கூட, முயற்சியால் சாதித்து காட்ட முடியும்

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com